தேதி.17.03.2026

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

O.S. No.25/2017 திரு.பிரேம்சந்த், த/பெ.ராஜாமணி பி.சா.1

<u>பி.சா.1: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

நான் தற்போது என்ன தொழில் செய்துவருகிறேன் என்றால் Sports அகாடெமியில் ஜீம் டெயினராக பணியாற்றி வருகிறேன். அதற்கு முன் நான் ஒரு வழக்கறிஞரிடம் குமஸ்தாவாக பணியாற்றி வந்தேன். வழக்கறிஞரின் பெயர் முகமது முபாரக். வழக்கின் வாதியின் ரூபாய் நான்கு லட்சம் கடன் வாங்கிக்கொண்டு அதற்கு ஒரு கடனுறுதி சீட்டை எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி நான்கு லட்ச ரூபாயை வட்டியுடன் செலுத்த வேண்டுமென்று ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு வாதி கொடுத்ததை நான் வாங்கிக்கொண்டேன் என்றால் சரிதான். வாதிக்கு நான் கடனுறுதி சீட்டை கொடுத்தேனா என்றால் வெற்று கடனுறுதி சீட்டை கொடுத்தேன். அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பு வாதி நேரடியாக என்னிடம் நான்கு லட்ச ரூபாயை திருப்பி செலுத்துமாறு கேட்டார் என்றால் சரியல்ல. நான்கு லட்சம் கேட்கவில்லை. வேறு ஒருவருக்கு கடன் கொடுத்ததில் அவர் இல்லாததால் என்னிடம் மீதி தொகையை ஒரு மாதத்தில் செலுத்துமாறு கேட்டார். இவ்வழக்கில் பொன்னுசாமி மகன் கண்ணன், சிவராமன் மகன் ஸ்ரீகாந்த் ஆகியோரை இவ்வழக்கில் பொய்யாக இணைத்து கூறுகிறேன் என்றால் சரியல்ல. தொகையை வாதி கண்ணனிடம் தான் கொடுத்தார். வாதியிடமிருந்து வாங்கிய பணத்தை ஏமாற்றுவதற்காகத்தான் பொன்னுசாமி மகன் கண்ணன், சிவராமன் மகன் ஸ்ரீகாந்த் ஆகியோரை சேர்த்து இவ்வழக்கில் கூறி

வருகிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு மேற்படி பொன்னுசாமி மகன் கண்ணன், சிவராமன் மகன் ஸ்ரீகாந்த் ஆகியோரை தெரியாது என்றால் சரியல்ல. நான்சொல்வது போல் கண்ணனுக்கு வாதி எந்ததொகையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் கண்ணனிடமிருந்து வாதி எந்தவொரு காசோலையும் பெற்றுக் கொள்ளவில்லை என்றால் சரியல்ல. வாதி வட்டித்தொழில் செய்து வந்தார் என்று பொய் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி வட்டி தொழிலும் செய்து வந்தார். நான் வழக்கறிஞரின் குமாஸ்தா என்ற அடிப்படையில் கருணையின் பேரில் தான் வாதி கடன் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் கண்ணன் மாதம் மாதம் வாதிக்கு ரூ.20,000/−ம் செலுத்தி வந்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு நான் கடனுறுதி சீட்டை கொடுத்ததை ஒப்புக்கொள்கிறேன் என்றால் 2012 அல்லது 2013ல் வெற்று கடனுறுதி சீட்டு கொடுத்தேன். வாதி கொடுத்த பணத்தை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதத்திற்காக நான் சொல்வதை ஏற்றுக்கொண்டாலும், செக்யூரிட்டியாக கடனுறுதி சீட்டு கொடுக்கப்பட்டாலும் அதற்கு சட்டப்படி அந்த பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றால் சரியல்ல. வாதியிடம் ரூ.4,00,000/−ம் கடன் பெற்றுக்கொண்டு அந்த கடனை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் பல பொய்யான சங்கதிகளை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டில் உள்ள கடன் தொகையை செலுத்த வேண்டிய கடமையில் உள்ளேன் என்றால் கடனே வாங்கவில்லை.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.